[5th March 1965

THE HON. SRI. V. RAMAIAH : (*a*) & (*b*) There is no proposal for metalling the Paramakudi to Nainarkoil road during the Third Plan period and hence the inclusion of this work in the next year's Budget does not arise. The cost of work of metalling the Ilayangudi to R. S. Mangalam road is estimated at Rs. 12.00 lakhs and the Government of India, have sanctioned a grant for it from the Central Road Fund (Ordinary) Reserve. The Chief Engineer has been permitted to take up this work for execution now.

Over-bridges at Level Crossings in Madurai

* **159.** *Q.*—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Food be pleased to state—

(*a*) whether there is any proposal to construct over-bridges, at the Railway Level Crossings near Subramanyapuram and near Meenakshi Mills at Madurai ; and

(*b*) if so, when the execution of the said works are expected to be taken up?

THE HON. SRI. V. RAMAIAH : (*a*) Yes.

(*b*) The two schemes are proposed to be taken up for execution during the Fourth Five-Year Plan period.

திருமதி பி. கே. ஆர். லக்ஷ்மிகாந்தம் : கனம் தலைவர் அவர்களே, மேம்பாலம் கட்டுவது சம்பந்தமாக பல வருஷங்களாகக் கேள்விகள் கேட்கப்படுகின்றன. சட்ட சபையிலும் பேசிக் கொண்டிருக்கிறோம். ஆனால், இதுவரையில் எந்தவிதமாகக் கட்டவேண்டும் என்று சொல்லக்கூடிய அளவிலே திட்டம் நிறைவேற்றப்படவில்லை. இதனால் ஏற்படுகின்ற சங்கடங்கள் மந்திரிகள் அனைவருக்கும் தெரியும். ஆகையினாலே, மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட இறுதி ஆண்டிலாவது இதைக் கட்டுவதற்கு உண்மையான ஏற்பாடுகளைச் செய்வதற்கு சர்க்கார் முன் வருமா?

கனம் திரு. வெ. ராமைய்யா : இப்பொழுது இருக்கக்கூடிய நிலைமைப்படி நான்காவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் வேலையைத் தொடங்கி கட்டி முடிக்கலாம் என்ற நிலைமை இருக்கிறது. இது போன்ற மேம்பாலங்கள் மதுரையில் மாத்திரம் அல்ல, ராஜ்யத்தில் அநேகமாக எல்லா நகரங்களிலும் பல தேவைப்படுகின்றன. மொத்தமாகப் பார்க்கும்பொழுது, மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் நாம் ஒதுக்கிய தொகையை விட மிக அதிகமான தொகை செலவிடவேண்டிய ஒரு கட்டம் இருந்தது. அது மாத்திரம் அல்ல. நெருக்கடி காரணமாக வேலைகளையெல்லாம் கொஞ்சம் தாமதப்படுத்த வேண்டிய நிலைமை இருந்தது. இருந்தாலும்கூட, சென்னை நகரத்தில் இந்த வேலையைத் தாமதப் படுத்தக் கூடாது என்று கருதி, இந்தப் பக்கத்தில் ஒரு சப்-வே (ரிசர்வ் பாங்கு சமீபம்) திருவெற்றியூரில் ஒரு மேம்பாலம், கோடம்

5th March 1965]

பாக்கத்தில் ஒரு மேம்பாலம் இவைகளையெல்லாம் எடுத்துக் கொண்டு நடத்திக் கொண்டிருக்கிறோம். இப்பொழுது இருக்கிற நிதி நிலையின்படி, இந்த வருஷம் இது போன்ற வேலைகளை எடுத்துக் கொள்வதற்கு போதிய நிதி வசதி கிடையாது. நான்காவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் இந்த வேலைகளைப் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்வதோடு அல்லாமல், வேலைகளைத் தொடங்குவதற்கும் அரசாங்கம் வேண்டிய ஏற்பாடுகள் செய்யும் என்று நம்புகிறேன்.

திரு. மீ. கலியாணசுந்தரம் : அமைச்சர் அவர்கள் கூறிய பதிலிலிருந்து நான் சில கேள்விகளைக் கேட்க விரும்புகிறேன். நான்காவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் இன்னும் எந்தெந்த ரயில்வே மேம்பாலங்கள் எடுத்துக் கொள்ள உத்தேசிக்கப்படுகிறது என்பதை அறியலாமா ?

கனம் திரு. வெ. ராமையா : அது போன்ற விவரம் என்னிடம் இல்லை. எனக்கு இருக்கக்கூடிய விவரப்படி மொத்தமாக ஏறத்தாழ சேலம் மற்ற இடங்களையெல்லாம் சேர்த்துப் பார்த்தால், 14 மேம்பாலங்கள் கட்டவேண்டிய நிலைமை இருக்கும்.

திரு. கோ. சி. மணி : இந்த லிஸ்டிலுள்ள 14 பாலங்களில், மாயவரம், கும்பகோணம் லெவல் கிராசிங் கூட்டப்படுவதற்கு எடுத்துக் கொள்ள வேண்டிய பாலம் வந்து இருக்குமா என்று அமைச்சர் அவர்கள் கூறுவார்களா ?

கனம் திரு. வெ. ராமையா : இந்த விவரம் என்னிடம் இல்லை. தனியாகக் கேள்வி போட்டால், பதில் சொல்லலாம்.

சேலம் மாவட்ட சலவையாளர் பலநோக்கு கூட்டுறவுச் சங்கம்

*** 160 கேள்வி.—திரு. க. ர. நல்லசிவம் :** கனம் கூட்டுறவு அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சேலத்திலுள்ள சேலம் மாவட்ட சலவையாளர் பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் எப்பொழுது ஆரம்பிக்கப்பட்டது ?

(இ) மாநிலக் கூட்டுறவு பதிவாளரது 19-12-1960-ம் தேதிய அறிக்கைப்படி (ஆர்.சி. 53871/60 பி. 2) சம்பந்தப்பட்ட சேலம் லாண்ட்ரி சொசைட்டியின் மூலம் அங்கத்தினர்கள் சேர்க்கப்பட்டனரா ?

THE HON. SRI N. NALLA SENAPATHI SARKARAI MANRADIAR : (*a*) The Salem District Washermen Co-operative Credit Society was registered on 2nd August 1963 and it started working on 22nd August 1963.

(*b*) No.